DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.06/2023**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**<u>Accused present</u>**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : களஞ்சியராணி | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**<u>16.05.2023</u>**

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் மண்டபம் கேம்பில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என் மாமா ஆவார். நான் எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ-1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1.போலீசார் விசாரணையில் கடந்த 12.03.2022-ம் தேதி 20.30 மணிக்கு ஆஜர் எதிரி வீட்டிற்கு சென்று அவரது வீட்டிற்கு வெளியில் நின்று கொண்டு என் கணவர் மாரிமுத்துவும், பழனீஸ்வரியின் கணவர் பொன்முனியாண்டி என்பவரும் ஏன் என் மனைவியை பார்த்து தவறாக பேசினீர்கள் என்று கேட்டார்கள் என்றால் சரியல்ல.

2. அதனால் எதிரிக்கும், என் கணவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதை பார்த்த

நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது ஆஜர் எதிரி என்னை பார்த்து அசிங்கமாக பேசி, உன்னால தாண்டி இந்த பிரச்சனையே என்று சொல்லி என்னை கையால் அடித்து, எனது ஜாக்கெட்டை கிழித்துவிட்டார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.